செய்தி வெளியீடு எண்: 140 நாள்.07.04.2015

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை, தங்கசாலை, பொது விநியோகத் திட்ட கிடங்கில் இன்று 07.04.2015 மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் இரா.காமராஜ், அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

கிடங்குகளில் சேமிப்பில் வைக்கப்பட்டிருந்த விலையில்லா திட்ட அரிசி, கோதுமை, சிறப்பு பொது விநியோகத் திட்ட துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் இருப்பதை ஆய்வின்போது மாண்புமிகு அமைச்சர் உறுதி செய்தார். அரிசி 4 மாத தேவைக்கு கையிருப்பில் உள்ளதாகவும், ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளதாகவும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார். நியாயவிலை அங்காடிகளுக்கு வழங்கப்படும் பொருட்கள் குறித்த நேரத்தில், மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடத்தில், உணவுப் பொருள் வழங்கல் துறையின் மூலம் வழங்கப்படும் மாதாந்திர ஒதுக்கீட்டுக்குட்பட்டு, நகர்வு செய்யப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு மாத இறுதிக்குள் 60% பொருள்கள் அங்காடிகளுக்கு முன்நகர்வு செய்யப்பட வேண்டுமென்றும், மீதமுள்ள 40% பொருள்கள் ஒதுக்கீட்டு மாதத்தின் 05ம் தேதிக்குள் நகர்வு செய்து முடிக்கப்பட வேண்டுமென்றும் கிடங்கு பொறுப்பாளர்களை அறிவுறுத்தினார். அரசு விடுதிகள், மருத்துவமனைகள், காப்பகங்கள் ஆகியவற்றுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பொருள்களை மீண்டும், மீண்டும் உரிய தர பரிசோதனை செய்த பின்னரே வழங்க வேண்டுமென்று தரக்கட்டுப்பாட்டு அலுவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அமைச்சர், பொது விநியோகத்திட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசியப்பொருள்களை லாரிகளிலிருந்து இறக்கி, மறு எடை செய்து, சரியான எடையில் பொருள்கள் வழங்கப்படுவதை உறுதி செய்தார். அத்தியாவசியப் பொருள்கள் எடையிட பயன்படுத்தப்படும் மின்னனு தராசுகள்

அவ்வப்போது பரிசோதனை செய்யப்பட்டு பழுது ஏதுமின்றி உபயோகப்படுத்த வேண்டுமென்று அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி உள்ளிட்ட திட்டங்களின் முழு பயன்களும் உரியவர்களை மட்டுமே சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டு, இன்று வரை **663** நபர்கள் தடுப்புக்காவல் தடை சட்டத்தின் கீழ் (BM Act) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கடத்தலுக்கு பயன்படும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, இதில் ஈடுபடும் ஊழியர்கள் தவிர கடத்தல் முதலாளிகளும் கைது செய்யப்படுகின்றனர். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசின் இந்த நடவடிக்கையை, மத்திய அரசு பாராட்டி வருவதுடன் ஏனைய மாநிலங்களும் இதனை பின்பற்ற வேண்டுமென்று அறிவுறுத்துகிறது.

இந்த ஆய்வின் போது உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**